**O.S.No.49/2023**

**DW.1** சரஸ்வதி

04-11-2025 ஆம் தேதி அன்று வழக்கிடை மனு எண்.5/2025 ன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

வாதி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்று சொன்னால், சரிதான். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் அஞ்சலக ஒப்புகை அட்டையில் காணப்படுவது எனது கையொப்பம்தான். அது **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தனபாலுக்கு கோயமுத்தூர் சிட்டி கோ-ஆப்ரேட்டிவ் வங்கியில் சேமிப்பு கணக்கு இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சேமிப்பு கணக்கு எண்.1853 என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணம் நான் ஏற்கனவே பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்துள்ளேன். அந்த வங்கி கணக்கில் எனது கணவரது பெயரில் ரூ.46,000/- இருந்தது. அதை நான் பெற்றுக் கொண்டேன். அந்த தொகையில் வாதிக்கும் சமபங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் தனபால் அதே வங்கியில் இரண்டு வைப்பீடுகளும் வைத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தை நான் ஏற்கனவே பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்துள்ளேன். அந்த இரண்டு வைப்பீட்டிலும் இருந்த தொகைகளையும் மேற்சொன்ன சேமிப்பு தொகையோடு ரூ.1,18,000/- ஆக நானே பெற்றுக் கொண்டு விட்டேன். அந்த இரண்டு வைப்பீட்டு தொகைகளிலும்

வாதிக்கு சமபாகம் கிடைக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாரத ஸ்டேட் வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. தாவா சொத்துக்களை வாங்கியதற்கும், தாவா அயிட்டம் சொத்து 2ல் கட்டிடம் கட்டியதற்கு நான் பண உதவி செய்தேன் என்று காட்டுவதற்கு என்னிடம்ஆவண ஆதாரம் உள்ளது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் நான் தொகை கொடுத்திருந்தால் அதை ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தற்பொழுது 33 வயது என்று சொன்னால் சரிதான். 2021ல் இந்த வாதி மேஜர் என்று சொன்னால் சரிதான். இந்த அசல் வழக்கில் 2 முதல் 6 பிரதிவாதிகளை நான் தாக்கல் செய்த Probate Op யில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பத்திர அலுவலகத்தில் வேலை செய்ததால் ஒரு ஆவணத்தை பதிவு செய்ய என்ன நடைமுறை என்று நன்கு தெரியும். பொதுவாக பத்திரத்தில் புகைப்படம் ஒட்டி அதன் மேல் கையொப்பம் செய்வது என்று சொன்னால் சரிதான். பாதி புகைப்படத்திலும் மீதிதாள்களிலும் கையெழுத்து வருமாறு போடுவார்கள். தனபால் உயிரோடு இருக்கும்பொழுது பயன்படுத்தி வந்த ஸ்விப்ட் காரையும் அவர் இறந்தபின் இந்த வழக்கு நிலுவையில் இருக்குள்பொழுது நான் விற்று விட்டேன். காரணம் அந்த கார் லோனில் வாங்கப்பட்டதால் லோனை அடைப்பதற்காக நான் விற்றேன். நான் கூறுவது தவறு என்றும், லோனை அடைப்பதற்காக நான் காரை விற்கவில்லை என்றும், வாதியை ஏமாற்றும் நோக்கில்தான் காரை நான் விற்று

விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. ஸ்விப்ட் காரை நான் 4 1/2 லட்சத்திதற்கு விற்றேன். 4 1/2 லட்சத்திற்கு விற்றேன் என்று கூறுவதற்கு ஆதாரமாக நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அந்த கார்அதிக தொகைக்கு விற்பனை ஆகியிருக்கும் என்றும், இருந்தாலும் நான் பெற்றதாக கூறும் 4 1/2 லட்ச ரூபாயிலும் வாதிக்கு சமபாகம் கிடைக்கக் கூடியது என்று சொன்னால் சரியல்ல. தனபால் அவர்கள் கையொப்பம்உள்ள பி.வா.சா.ஆ.1 மற்றும் 2ன் அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளது. அந்த இரண்டு அசல் கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. உயிலில் உள்ள தனபாலின் கையொப்பத்தையும் மேற்சொன்ன கிரைய ஆவணங்களில் உள்ள தனபாலின் கையொப்பங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. பி.சா.3 திவ்யா எனக்கு நெருங்கிய உறவினர் என்று சொன்னால் சரிதான். திவ்யா எனக்கு அக்காள் மகள் ஆகும். திவ்யாவிற்கு நான்தான் படிப்பதற்கு உதவி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. திவ்யா எங்கள் வீட்டில்தான் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2015 ல்தான் எங்கள் வீட்டிற்கு வந்தார். 2018 ஜனவரி வரை எங்களோடு இருந்தார். திவ்யாவிற்கு எங்கள் வீட்டில் இருந்த காரணத்தினால் நாங்கள் பண உதவி செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. காரணம் அவர் 2014 லேயே வேலைக்கு சென்று விட்டார். அவர் பயோலைன் லேபில் வேலையில் இருந்தார். திவ்யா சிகிச்சை பெற்று வந்த கால கட்டத்தில் அவர் எங்கள் வீட்டில் இருந்து

வந்தார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில்தான் அவர் சிகிச்சை பெற்று வந்தார் என்று சொன்னால் சரிதான். திவ்யா எனது நெருங்கிய உறவினர் என்பதால் எனக்காக எதை வேண்டுமானாலும் செய்வார் என்று சொன்னால் சரியல்ல. தனபால் எழுதியதாகச் சொல்லப்படும் பி.வா.சா.ஆ.16 உயிலை நான் பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.16 ல் முதல் பக்கத்தில் பத்தி-1, பத்தி-2 களில் நிறைய இடைவெளிகள் காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. இரண்டாம் பக்கத்தில் முதல் நான்கு வரிகளில் இடைவெளி அதிகமாக உள்ளது என்று சொன்னால் சரிதான். பக்கம் 2 ல் மற்ற வரிகளில் இடைவெளி சிறியதாக காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். பக்கம் 3 ல் சொத்து விவரத்தில் செக்குபந்தியில் நிறைய இடைவெளிகள் உள்ளன என்று சொன்னால் சரியல்ல. உயிலில் ஒவ்வொரு பக்கத்திலும் தனபாலின் கையொப்பங்கள் மாறுபட்டு காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் தனபால் உயில் எதுவும் எழுதவில்லை என்றும், நானும், எனது நெருங்கின உறவினர்களும் சேர்ந்து ஆள் மாறாட்டம் செய்து போலியாக ஒரு உயிலை தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணம் சட்டப்படி செல்லாது மற்றும் இல்லாநிலையது என்றும், அது வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் வாதியின் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. கடந்த 2012 ஆம் வருடம் தனபால் அவர்கள்

பொள்ளாச்சியில் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்தார் என்று சொன்னால், துணை வட்டாட்சியராக பணி புரிந்தார். ஆனால் வருடம் எனக்கு நினைவில்லை. உயிலில் உள்ள விவரங்கள் முன்னுக்குபின் முரணாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் தனபால் உயிலை எழுதியிருந்தால் சரியான தகவல்களோடு எழுதியிருப்பார் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> இல்லை

sd/ சரஸ்வதி,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.